# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 210/2015**

பெயர்: **அருள்குமார்** நாள்: 22.11.2023

வா.சா.1 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வா.சா.1 – அருள்குமார் - சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.28</u>

அசல் வழக்கிற்கான தகவலை ஊர்பொதுமக்கள் சுமார் 10 நபர்கள் வழக்கறிஞரிடம் தகவல் சொன்னார்கள். தகவல் அளித்த அனைவரும் வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனரா என்றால், அவர்கள் நான் வழக்காட அனுமதி கொடுத்துள்ளார்கள். அதனால் அவர்களை அனைவரையும் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. வழக்கு தாக்கல் செய்ய எழுத்துபூர்வமான அதிகாரம் பெற்றுள்ளேனா என்றால், இல்லை. வாய்மொழியாகத்தான் கூறினார்கள். கோவில் இடமான சர்வே எண் 384/5 க்கான பட்டா ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. கோவிலுக்கு நான்தான் தர்மகர்த்தா என்பதற்கான எழுத்துமூலமான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. வழக்கு கோவில் சம்பந்தமான வரவு செலவு புத்தகம் உள்ளது. அந்த புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

2) நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிடும்போது பிரதிவாதிகள் யாரும் ஆஜராகவில்லை என்று சொன்னால், சரியல்ல. ஆஜராகியிருந்தார்கள். நான் வழக்கிற்காக பிரதிவாதிகள் ஆஜராகியிருந்தார்கள் என்று பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 384/6 வழியாக சாமி ஊர்வலம் ஒருபோதும் நடக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 384/6 காலியிடத்தில் கோவில் திருவிழா சம்பந்தமாக நையாண்டி மேளம், அன்னதானம் வழங்குவதற்காக பயன்படுத்தி வந்ததாக இந்த வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண் 384/5 ஆனது கிராம நத்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.2

ஆவணத்தில் நான்தான் கோவிலை பராமரித்து வருவதாக குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். சர்வே எண் 384/6 ஆனது கிராம நத்தம் ஆகும். கிராம நத்தமானது யார் பெயரில் உள்ளதோ அவர்தான் உரிமையாளர் என்றாலும், அரசாங்கம் உரிமையாளர் அல்ல என்றாலும், சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள விபரங்கள் சரியானவைதான். வா.சா.ஆ.8 ஆவணப்படி வழக்கு சொத்திற்கான பழைய சர்வே எண் 111/6 ஆனது குட்டியம்மாள் பெயரில்தான் உள்ளது என்றால், சரிதான். அந்த பெயர் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3) சர்வே எண் 111/6 ல் குட்டியம்மாள் மற்றும் அவருடைய குடும்பத்தினர்கள்தான் குடியிருந்து வருகிறார்கள் என்றாலும், மேற்படி சர்வே எண்ணில் இருந்த வீடு சீதலமடைந்துவிட்டது என்றால், சரியல்ல. அதில் வீடே இல்லை. சர்வே எண் 384/6 ஆனது கோவிலின் அனுபவத்தில்தான் உள்ளது என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அது பரம்பரை பரம்பரையாக கோவிலின் அனுபவத்தில்தான் உள்ளது. சர்வே எண் 384/6 ஆனது ஒருபோதும் கோவிலக்கு பாத்தியப்பட்ட நிலம் இல்லையென்றாலும், அது குட்டியம்மாள் மற்றும் அவருடைய குடும்பத்தினர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. சர்வே எண் 384/5 ஆனது கோவில் நிலம் என்பதால் பிரதிவாதிகள் ஒருபோதும் தொந்தரவு கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. பொதுவாக சொத்து யாருக்கு உரிமையானதோ அவர் பெயரில்தான் வருவாய் ஆவணங்கள் வழங்கப்படும் என்றால், சரிதான். குட்டியம்மாளை வழக்கு தரப்பினராக சேர்த்துள்ளோமா என்றால், இல்லை. குட்டியம்மாளுக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை, அதனால் சேர்க்கவில்லை. வழக்கு வியாஜயங்கள் தவறானவை என்றால், சரியல்ல. சர்வே எண் 384/6 ல் வெளிநபர்கள் சென்று வர எந்த பாத்தியமும் இல்லையென்று சொன்னால், சரியல்ல. அது கோவில் சம்பந்தப்பட்ட இடமாகும்.

4) சர்வே எண் 384/6 ல் கோவில் சம்பந்தப்பட்டவர்களோ அல்லது வெளிநபர்களோ அத்துமீறி நுழைந்தால் தடுப்பதற்கு பிரதிவாதிகளுக்கு உரிமையுள்ளது என்றால், சரியல்ல. கோவிலை யார் யார் கட்டினார்கள் என்றால், அருணகிரிகவுண்டர், அர்த்தனாரிகவுண்டர், தாத்துகவுண்டர், அருணாசலகவுண்டர் ஆகியோர்கள் சேர்ந்து கட்டினார்கள். கோவிலில் 1 ம் பிரதிவாதியின் தாய் தகப்பனாருக்கு மட்டுந்தான்

உரிமையிருந்தது. 1ம் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் இல்லை. இன்றைய தேதி வரை 1ம் பிரதிவாதி கோவிலுக்கான வரியை செலுத்தி வருகிறார்கள் என்றால், சரியல்ல. அவருடைய தாயார் உயிருடன் இருக்கும் வரையில்தான் வரி கொடுத்தார். வா.சா.ஆ.6, 7 மற்றும் 9, 10 ஆவணங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 384/5, 6க்கு அரசுதான் உரிமையாளர் என்றாலும், அரசை தரப்பினராக சேர்க்காததால், வழக்கு தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11.58

ஒப்பம்/அருள்குமார்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.